விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

70—

மரம் நடும் பணியை ஒரே துறையால் செயல்படுத்தல்.

வினா 6890 — திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இப்பொழுது பல்வேறு துறைகளின் மூலம் நிறைவேற்றப்படும் மரம் நடும் பணி ஒரே துறையால் (Under one Agency) நடைபெற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2 ஒழுங்குப் பிரச்சனை.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலை 11.08 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு நடைபெற இருக்கிறது. அதிலே உங்கள் கட்சித் தலைவர் வருவார்கள். அங்கே தெரிந்து கொள்ளுங்கள். ஆகவே இது பாய்ண்ட் ஆப் ஆர்டரில் வராது. இவை யெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவச்சலம் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: தலைவர் அவர்களே, முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. பக்தவச்சலத்தின் 89-வது பிறந்த நாளை முன்னிட்டு இந்த அவை சார்பாக அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 மே 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு என் சார்பாகவும், இந்த அவையின் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 265 (1)-வது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1986-87 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன் :—

1. மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்).
2. திரு. கோ. பெருமாள் பிள்ளை.
3. திரு. எஸ். ரத்தினவேல்.
4. திரு. கே. வடிவேல்.
5. திரு. இரா. சண்முகம்.
6. திரு. அ. பாலுசாமி.
7. திரு. கே. ஆர். கணபதி.
8. டாக்டர் ந. மாசிலாமணி.
9. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்.
10. திரு. எஸ். ரெத்தினராஜ்.
11. திரு. கோ. வீரய்யன்.
12. டாக்டர் தே. குமாரதாஸ்.

பேரவையின் 266-ஆவது விதியின் கீழ் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

(ஆ) அரசு உறுதி மொழிக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 274(1)-ஆவது விதியின் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்